முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1421

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.08.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான சக்தியே அரங்கா வாழ்க
ஞானவான்கள் படைக்க வந்த
ஞான தேசிகனே வாழ்கவாழ்க
ஞாலமதில் சுப்ரமணியர் யானும் உமை போற்றி
2. போற்றியே ஞான அறிவுரை ஆசி
புகலுவேன் சோபகிருது வேங்கை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 03 ம் நாள், 20.08.2023 ஞாயிற்றுக்கிழமை)
ஆற்றல்பட அரங்கன் பலம் உலகறிய
அகிலத்தார் அரங்கனை வலம் வந்து
3. வந்துமே உலகமாற்றம் என்கின்ற
வல்லமையான சேவையை களங்கமற பேருலகில் செய்து
கந்தவேலன் என் அருளாலே கருணைகொண்டு அரங்கன் வழிகாட்ட
கலியுகத்தார் அனைவரும் கடைத்தேறி
4. கடைத்தேறி இந்த பேருலகில் ஞானிகளாக
கண்டுரைப்பேன் உலகமாற்றம் செய்யும்
தொண்டர்களாக ஞானவான்களாக ஞானிகளாகவே
தேசிகன் வழிகாட்டலில் ஆற்றல் பெருகிப்பெருகியே
5. ஞானவழி பேருலகை பிசகின்றி ஆளுகின்ற மாற்றத்தை
உற்றதொரு உயர் சேவையாக இந்த உலகில் செய்து
உத்தமமாய் அரங்கன் வழி உலகோர் ஞான ஆட்சிக் காலத்தை
விந்தைபட சடுதி நடத்தி விளம்பிடுவேன் மக்களுக்கு பாதுகாப்புத் தருவர்
6. தருகவே அற்புதம் நடக்கும் தக்கபடி காலம்
பொறுமைகொண்டு அரங்கனால் நிகழ இருக்க
பேருலகோர் அரங்கன் பிரணவக்குடில் நோக்கி வந்தால் போதும்
போதுமப்பா இந்த மாற்றம் புண்ணிய பலத்தால் சடுதி காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–